## மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2016

-----------------------------------------------------------------------------------------------------------

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 சனவரி 03 ஆம் திகதிய 1843/45 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட 2013 இன் 02 ஆம் இலக்க மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு, 108 மற்றும் 111 பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கதயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம்தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 நிறுவனத்தை இஸ்தாபித்தல்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2014 ஜனவரி 03 ஆம் திகதிய 1843/45 ஆம் இலக்க கொண்ட அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட 2013 இன் 02 ஆம் இலக்க மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவக கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 2015 திசெம்பர் 15 ஆம் திகதி நிறுவனத்தை இஸ்தாபித்திருந்தது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக் கூற்றுக்களின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேராதனை பல்கலைக்கழகத்திற்கு இணைந்த மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இனங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஆராய்ச்சி படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய உத்தியோகத்தர்களால் ஆராய்ச்சி முன்மொழிவின் செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கை, ஆராய்ச்சி முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படாதிருக்கையில், மீளாய்வாண்டினுள் உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 242,823 ஆன ஆராய்ச்சி படிகள் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் II பகுதி | |
| VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 இன் (ii) மற்றும் (iii) ஆம் பிரிவுகள். | தமது கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய சேவைகளிலிருந்து உழைக்கும் கட்டணங்களிலிருந்து 10 சதவீதம் தமக்கு உரிய உயர்கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. ஆயினும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்ட ரூபா 18,936,884 ஆன வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களிலிருந்து ரூபா 1,893,688 ஆன கட்டணம் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் கழித்து பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95(02) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2003 சனவரி 09 ஆம் திகதிய PE1/174/1-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை. | மீளாய்வாண்டின் 16 உத்தியோகத்தர்களுக்காக கூட்டிணைந்த படிகளாக ரூபா 273,500 ஆன தொகையையும், ஓர் உத்தியோகத்தருக்கான கௌரவக் கொடுப்பணவாக ரூபா 9,000 ஆன தொகையாக கூட்டுத்தொகை ரூபா 282,500 சுற்றறிக்கைக்கு இணங்காது செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 20,000,000 ஆன தொகை தொடர்பாக சுற்றறிக்கை பிரகாரம் நிதி அமைச்சரின் அங்கிகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் இஸ்தாபிக்கப்பட்டதன் பின் முதலாம் வருடத்திற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் மிகை ரூபா 11,646,388 ஆனது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2013 இன் 02 ஆம் இலக்க மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கட்டடளைச் சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதிப்புரையின் மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் என்ற துறைகளில் பட்டப்பின்படிப்புப் போதனைகளையும், பயிற்சியையும்,ஆராய்ச்சியையும் வழங்குதல்.

(ஆ) புல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருமைப்பாட்டுடனும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகளில் அளிக்கப்பட வேண்டிய பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்கள் என்பவற்றைத் தீர்மானித்தல்.

(இ) நிறுவகத்தின் குறிக்கோள்களை ஒத்த அல்லது பொருளளவில் ஒத்த, இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன், ஆசிரியர்களை, மாணவர்களை மற்றும் கல்விமான்களைப் பரிமாற்றுதல் என்ற வகையாக அல்லது வேறு வகையாக ஒத்துழைத்தல்.

(ஈ) நிறுவகத்தில் சேருவதற்கு நாடுகின்ற மாணவர்களினால், அல்லது நிறுவகத்தின் மாணவர்களினால், பல்கலைக்கழகங்களிலும் ஒத்த அந்தஸ்தைக் கொண்ட இடங்களிலும் தேறப்பட்ட பரீட்சைகளையும், பின்பற்றப்பட்ட படிப்பு அல்லது கற்கைக் காலப்பகுதியையும், துணைவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, நிறுவகத்திலான அத்தகைய பரீட்சைகளுக்கும் படிப்பு அல்லது கற்கைக் காலபகுதிகளுக்கும் அல்லது அவற்றின் அத்தகைய பாகத்துக்குச் சமமாகவுள்ளதென ஏற்றங்கீகரித்தல் மற்றும் அத்தகைய ஏற்றங்கீகாரத்தை எந்நேரத்திலும் மீளப்பெறுதல்.

(உ) பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனையுடன் ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமை பொருளுதவிகள், ஏழைக் கல்வி உதவிகள், உதவுத்தொகைகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்களைத் தாபித்தல் மற்றும் அளித்தல்.

(ஊ) நிறுவகத்துக்கு வெளியேயுள்ள இடங்களில் ஆராய்ச்சியையும் கற்கைநெறிகளையும் அல்லது அத்தகைய கற்கை நெறிகள் பாகங்களையும், அதற்காக ஏற்பாடு செய்கின்ற துணைவிதிகளுக்கிணங்க நடாத்துவதற்கான ஒழுங்கேற்பாடுகளை செய்தல்.

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் மீளாய்வாண்டிற்கு (கல்வி ஆண்டு) 810 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்படாததனால் நிறுவகத்தின் செயலாற்றலை பரீட்சித்தல் சிக்களாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

2015 செப்தம்பர் 15 திகதி உத்திதியோகபூர்வமாக நிருவப்பட்ட இந் நிறுவகம், ஓராண்டிற்கும் மேலாக பேராதனை பல்கலைகழகத்திற்கு சொந்தமான 46 நிலையான சொத்துக்களை பயன்படுத்தி அப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான ஓர் கட்டிடத்தில் நடாத்திச்செல்லப்பட்ட போதும் அதன் சட்ட ரீதியான உரிமையை சுவீகரித்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பேராதனை பல்கலைகழகத்தின் கலை பீடத்திற்கு சொந்தமான நிதிய கணக்கொண்டின் ஊடாக பட்டப்பின்படிப்பு பாடநெறி நடாத்திச்செல்லப்பட்டிருந்ததுடன், தனியான நிறுவகமொன்றாக நிருவப்பட்ட பின்னர் நிதியத்தில் காணப்பட்ட ரூபா 13,231,258 ஆன மீதியை சுவீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் பதவி அணியில் ஓர் நிரந்தர வேலை உத்தியோகத்தர் மற்றும் ஓர் சுருக்கெழுத்தாளர் பதவி வெற்றிடமாக இருந்த போதிலும் ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.2 ஆம் பிரிவின் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்கு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தின் 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள், 2017 யூன் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் படி கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 உள்ளகக் கணக்காய்வு**

நிதி அமைச்சு செயலாளரின் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ வழிகாட்டி சுற்றறிக்கையின் பிரகாரம், காலாண்டிற்கு ஒரு முறை உள்ளக கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு குறித்த திகதிகளின் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுவின் கலந்துறையாடலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் குறைந்தபட்சம் 03 மாதத்துக்கு ஒரு முறையாவது கணக்காய்வு குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிக்கான கணக்காய்வுக் குழு ஒன்றுக்கூடல் 01 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

**5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் மற்றும் செலவினத்தையும், உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 20 விடயங்களில் 20 சதவீதம் தொடக்கம் 595 சதவீதம் வரையிலான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| **(அ)** கணக்கீடு | சொத்துக்கள் முறையாக சுவீகரிக்கப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** முற்பணம் நிருவாகம் | தேவையான அளவை விஞ்சி முற்பணம் வழங்குதல். |